# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 68/2016
ஆணை எண்.128/2016
நாள் :27/07/2016

02.02.2016 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி

– முறையீட்டு மனுதாரர்

உதவி செயற்பொறியாளர்,
மண்டலம் –4,
சென்னை மாநகராட்சி

– எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, தண்டையார் பேட்டை மண்டலம் (மண்டலம்–4), காசிமேட்டுப் பகுதியில் " லஞ்சம் கேட்ட அதிகாரியை கண்டித்து ஆர்ப்பாட்டம் " என்ற செய்தி 02.02.2016 நாளிட்ட தினமலர் நாளிதழ் மூலம், இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7–ன் கீழ் மேற்படி நாளிதழில் வெளியிடப்பட்ட செய்தி "நிர்வாக சீர்கேடு" சம்பந்தப் பட்ட செய்தி என கருதப்பட்டு 68/2016 எண்ணிட்ட அசல் மனுவாகப் பதிவு செய்யப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம் (மண்டலம்–4) காசிமேடு பகுதியில் " லஞ்சம் கேட்ட அதிகாரியை கண்டித்து ஆர்ப்பாட்டம் " என்று 02.02.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் வெளியான செய்தி குறித்து மேற்படி மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. காசிமேடு புதுமனைக்குப்பத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை காவல் துறையின் உதவியுடன் அகற்ற முற்பட்டபோது பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததின் காரணமாக ஆக்கிரமிப்புகளை அகற்ற இயலவில்லை என்றும், ஆக்கிரமிப்புகளை அகற்றினால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்ற அச்சத்தில் இச்சம்பவத்தை மறைக்கும் விதமாக 43–வது கோட்ட உதவிப் பொறியாளர் அவர்களின் பெயருக்கு குந்தகம் ஏற்படும் விதத்தில் 100க்கும் மேற்பட்டவர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு மட்டுமில்லாமல் உதவி செயற்பொறியாளர் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்த மூதாட்டியிடம் ரூ.20,000/– இலஞ்சம் கேட்டதாகவும் அவரைத் தரக்குறைவாகப் பேசியதாகவும் பொய்பிரசாரம் செய்து தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது என மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார்.

/2/

/2/

2. மேற்படி நாளிதழ் செய்தி சம்பந்தமாக 43–வது கோட்ட உதவிப் பொறியாளர் அவர்களிடமும் 20.06.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் பொழுது அரசாங்க உயரதிகாரிகள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு புதுமனைக்குப்பம் பொதுமக்கள் எழுதிய மனுக்களின் நகல்களை சமர்ப்பித்தார். மேற்படி பொதுமக்கள் மனுவில், புதுமனைக்குப்பம் 3–வது தெருவின் பாதிவழியை கந்து வட்டி நாகேஷ் என்பவர் ஆக்கிரமித்து கடை கட்டியுள்ளார் என்றும், இக்கட்டிடத்தை சாராய வியாபாரி வசந்தாவுக்கு வாடகை விடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மழை, வெள்ளம், சுனாமி மற்றும் பூகம்பம் போன்ற பேரிடர் நிகழ்வின் போது அவசரமாக வெளியேறவும், ஆம்புலன்ஸ் (ம) தீயணைப்பு வண்டிகள் செல்லவும் மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றப்படவேண்டும் என முறையிடப்பட்டுள்ளது.

3. மேற்படி பொதுமக்களின் மனுக்களின் அடிப்படையிலேயே புதுமனைக்குப்பம், 3–வது தெருவில் பாதிவழியை அடைத்து ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட பெட்டிக்கடையை அகற்றுவதற்காக, சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்பாளருக்கு 30.01.2016 நாளுக்கு முன்பே கடையை காலிசெய்து விடுமாறு முன்னறிவிப்பு செய்யப்பட்டது என்று விசாரணையின் பொழுது உதவிப்பொறியாளர் தெரிவித்தார். மேற்படி கடையை அகற்றாததால் 30.01.2016 அன்று ஆக்கிரமிப்பை அகற்ற காவல் துறை சார் ஆய்வாளர் மற்றும் 4 காவலர்களுடன் தான் சென்றதாகவும், அதை அறிந்த பொதுமக்கள் என்ற பெயரில் சுமார் 100 நபர்கள் கூடி ஆக்கிரமிப்பை அகற்ற விடாமல் தடுத்ததாகவும் அதனால் வேறு ஒரு நாளில் போதுமான காவல்துறை பாதுகாப்புடன் ஆக்கிரமிப்பை அகற்றலாம் என சார் ஆய்வாளர் கூறியதை தொடர்ந்து ஆக்கிரமிப்பு அகற்றப்படாமல் திரும்பி வந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் நடைபெற்றதற்கு மறுநாள் பத்திரிகை நிருபருடன் பொது மக்கள் என்ற பெயரில் சில நபர்களுடன் தனது அலுவலகத்திற்கு வந்து தான் பணம் கேட்டதாகவும் அவர்களை தரக்குறைவாக பேசியதாகவும் கூறி ஆக்கிரமிப்பினை அகற்றுவதிலிருந்து திசை திருப்புவதற்காக ஆர்பாட்டம் செய்தனர் என்று உதவிப் பொறியாளர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

4. இந்நேர்வு சம்பந்தப்பட்ட நாளிதழ் செய்தி, மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர் அவர்களின் வாக்குமூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. மேற்படி நாளிதழ் செய்தியில் உண்மைத்தன்மை இருப்பதாகத் தெரியவில்லை. பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையிலேயே மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்ற மாநகராட்சி அலுவலர்கள் காவல் துறையின் உதவியை நாடியுள்ளனர். போதுமான காவலர்கள் இல்லாத நிலையில் பொதுமக்கள் என்ற பெயரில் திரண்டு வந்த நபர்களை தடுத்து ஆக்கிரமிப்பினை அகற்ற மாநகராட்சி அலுவலர்களால் இயலவில்லை எனத் தெரிகிறது. பெட்டிக் கடை நடத்த, 20 ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்ட உதவி செயற்பொறியாளரை கண்டித்து, காசிமேடு, மாநகராட்சி செயற்பொறியாளர் அலுவலகம் முன் மீனவர்கள் போராட்டம் நடத்தினர் என்ற செய்தியுடன் புகைப்படத்தையும் வெளியிட்ட தினமலர் நாளிதழ் காசிமேடு பகுதி, புதுமனைக்குப்பம் 3–வது தெருவின் அகலம், தெருவை ஆக்கிரமித்து கட்டப்பட்ட கடை குறித்த விவரங்கள் மற்றும் புகைப்படத்துடன் மேற்படி நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தால் பொதுமக்களுக்கும் பயன் உள்ளதாக இருந்திருக்கும் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

/3/

தெருவை ஆக்கிரமித்து கடை கட்டிய நபர் மற்றும் கடையை குத்தகைக்கு எடுத்த மூதாட்டி ஆகிய இருவரும் சட்டத்திற்கு புறம்பான தொழிலை செய்து வருவதாக மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை எதிர்த்து மாநகராட்சி களப்பணி ஆய்வாளர்கள் எதுவும் செய்ய இயலாது. தெருவில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்பது பொதுமக்களின் எதிர்ப்பார்ப்பு. ஆக்கிரமிப்பு இன்றைய நாள் வரை அகற்றப்படாமலேயே உள்ளது. எனவே மாநகராட்சி உயரதிகாரிகள் காவல்துறை உயர்அதிகாரிகளுடன் கலந்து பேசி மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட மண்டல அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெறுநர்

மண்டல அலுவலர் / உதவி செயற்பொறியாளர்,
மண்டலம் –4,
சென்னை மாநகராட்சி,
எண்.266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 021

/உண்மை நகல்/

செயலாளருக்காக.